2003 ஏப்ரல் 28]

தயாரிக்கின்ற திட்டம், நமது அரசிற்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலைகள் அனைத்தும் நட்டத்திலே இயங்கிவருகிற காரணத்தினால், எத்தனால் தயாரிக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவுச் சர்க்கரை ஆலையினுடைய விவசாயிகளைக் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்கள் அருமையான கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இப்போது, மாண்புமிகு பிரதமர் அவர்கள்கூட, கரும்பு விவசாயிகளினுடைய பிரச்சினையை, அதிலும் குறிப்பாக, உத்தரப்பிரதேச மாநிலத்தினுடைய கரும்பு விவசாயிகளுடைய பிரச்சினையைக் கவனிப்பதற்காக, அதற்கு ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு கரும்பு விவசாயிகளினுடைய பிரச்சினையையும் அதிலே சேர்த்துக்கொள்வதற்கு, நம்முடைய மாநில அரசு பிரதமருக்குக் கடிதம் எழுதி, நம்முடைய பிரச்சினையையும் வலியுறுத்தி, கரும்பு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 343, திரு. ஆர். சாமி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

343—

துணை மின் நிலையம்

***19608—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TRUTH ALONE TRIUMPHS

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியில், 110 மெகாவாட் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் பணி, நடப்பாண்டில் தொடங்கப்படுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடப்பாண்டில், பணிகள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இருட்டில் கிடந்த தமிழகத்தை வெளிச்சப் பாதைக்குக் கொண்டுவந்து, நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், என்னுடைய மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் 110 மெகாவாட் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு, இந்த நடப்பாண்டே அமைத்துத் தரப்படும் என்று சொன்ன டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 344, திரு. ப. பொன்னம்பலம். மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

344—

நுகர்வோர் கடன்

***7879—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதவைகளின் மறுவாழ்விற்கு கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் நுகர்வோர் கடன் திட்டத்தின்கீழ், கடன் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS